215

215

எந்நூலுக்கும் இந்நூலே மூலம்

(மூன்ருவது அத்தியாயம்)

ஒரு மொழி

(இரண்டாம் பதிப்பு.)

18 MAY 1945

188

ஞானவள்ளல்

பரஞ்ஜோதி மஹான்

அருளியது.

பரிபூரண பரஞ்ஜோதியின்

உயர்ஞான சபையோரால்

வெளியிடப்பட்டது.

மதுரை ராஜேஸ்வரி பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

உரிமைப் பதிப்பு. (ACT XXI of 1860) டிசம்பர் 1944.

(Copy Right Reserved)

1 MAY 1946
MADRAS



GNANAVALLAL PARANJOTHI MAHAN.

ஞானவள்ளல்

பரஞ்ஜோதி மஹான்

181.48

கவனிப்பு.

உலக நல்லடியார்களே!

பரிபூரண பரஞ்ஜோதியின் உயர்ஞான சபை, ஞான வள்ளல் பரஞ்ஜோதி மஹான் அவர்களால் மதுரையில் ஸ்தாபிக்கப்பெற்று 1942ஆம் மேமீ 18உ 1860 வருஷத்திய (Societies Act XXI) சட்டப்படி ரிஜிஸ்தர் செய்யப்பெற்றது. நன்மைக்கு ஆளாவோர் நாளுக்குநாள் பெருகி பல ஊர்களிலும் மாகாணங்களிலும் கிளைச் சபைகள் அமைக்கப்பெற்று வருகின்றன.

தன்னைத்தான் அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஞான தாகமுடையவர்களை, தன்னைத்தான் அறிந்து தன் சக்தியை அபிவிருத்தி செய்து அன்றாட வாழ்க்கையில் பிரயோகித்து பேரின்பமாய் பிறவியின் பெரும் நோக்கை முடித்து, ஐக்கிய முத்தி அடையச் செய்வது இச்சபையின் நோக்கம்.

"இருளே பூரணம்-உயிர் இருப்பது இருளில்-உயிரா யிருப்பது நினைவு-உயிரின் ஒத்தாசையாயுள்ளது தன் தொனி-உயிரின் பொருளாயுள்ளது அக்கினி அல்லது ஜோதி-உயிரின் நிர்வாகி அறிவு-அடக்கமும் அணுவில்-விரித்ததும் அணுவால்-அறிந்ததும் அணுவினுள் ஆதி மெய்யுணர்வால்" என்பது இச்சபையின் தத்துவம்.

25 வயதிற்கு மேல் 70 வயதிற்குட்பட்டவர்கள் பெரிதும், இல்லறவாசிகளாயும் திடகாத்திர மேனி உள்ளவராயும், சரீர திங்கற்றவராயும் இருந்து, சபையின் 10 நிபந்தனைகளின்படி நடந்துகொள்பவர்கள் அங்கத்தினர்களாகச் சேரலாம். அறிவாளிகளே, ஊக்கம் கொள்வீர்களாக.

இங்ஙனம்,

பரிபூரண பரஞ்ஜோதியின் உயர்ஞான சபையார், மதுரை.

B சுந்தரராஜன்,

காரியதரிசி.

R65

ஒரு மொழி

அண்டமும் பிண்டமும் நிறைந்து அனாதியாய் அனைத்திற்கும் இருப்பிடமா யிருக்கின்ற நிலையில்-இருளில்-பர வெளியில், இரண்டற்ற நிலையிலிருந்த நினைப்பாம்-ஆதி, அநேக காலமாய், கால அளவில்லாமல் மறதியாய்க் கிடந்ததன் பின் நினைப்புக்குச் சலனமேற்பட நினைவுண்டாகி, மறதி தெளிந்து விழிப்பேற்பட்ட நினைவே, நினைவாய், நினைக்க நினைக்க, நினைவின் தன் சக்தியே நிரம்பியதொரு தோணி தன்னைச் சூழ்ந்துகொண்டிருக்க, அதுவே அதுவாய், அதுவே அறிந்து ஆனந்த-மும் ம் ம்-என்ற சோக ராக மோகமான முழக்கத்தால், சூடாய், சுழலாய், சுழலின் வேகத்தால், தானேதான் சொரூபமாக ஆகியபின் (பரஞ்ஜோதியில் பார்க்க) அசைவாய், ஆட்டமாய், ஆடலாய்ப் பாடலாய், ஆனந்த முழக்கமாய், அங்கிங்கெங்குமாய், ஏகமாய், நிறைந்த ஓங்கார சப்தமாய், அன்று முதல் இன்றுவரை இனி எப்போதும் ஓயாது, கூடிடாது, குறைந்திடாதிருக்கும் மொழியே, நமது திருமொழியாம் ஒரு மோழி.

நிறைந்திருக்கும் பூரணத்தில் நினைக்கும் நினைப்புக்கும், ஆடல் பாடலுக்கும், அதற்குரிய ஆனந்த மோகத்திற்கும், மேள தாள இராகத்திற்கும், முன்னும் பின்னுமாய் உள்ளது நமது திருமொழியாம் ஒரு மொழி.

கலிமா, தாரக, ஊமை எழுத்தென்னும் அலிப்லாம் மீம்-அகார உகார மகார எழுத்தாய் எண்ணாயிரங்கோடி நூல்களாய் விரிந்ததும், ஒவ்வொரு எழுத்திலும் நிறைந்து அதற்குரிய குணத்திற் கேற்றவாறு தொனித்துக் கொண்டதும், விரிந்தது எவ்வளவோ, அவ்வளவும் ஒரு சிறு கண்ணுக்குத் தெரியாத, அணுவளவில் அடங்கியதாயும், எழுதிய எழுத்துக்கும் எட்டாததாயும் எழுத்திற்கு உள்ளும் புறமும் நிறைந்து வருகிறது எதுவோ அதுவே நம் திருமொழியாம் ஒருமொழி.

ஒரு வித்தின் குணம் மரமெல்லாம் நிரம்பி இருக்கின்றது போல, ஒருமொழியின் முழக்கம் எல்லா லோகங்களிலும் நிறைந்திருக்கின்றது. நமது சத்திய மெய்யுணர்வின் சக்தியால் நம் சரீர அணுக்களெல்லாம் நற்பதவி அடைந்துகொண்டன. உங்கள் சரீரத்தைப் பார்த்தவர்களுடைய குணங்களும் நற்குணங்களடைந்து வருகின்றன. நமது, - உங்களின் ஐக்கியத்திற்கு முன்னும், பின்னும், லோகங்கள் எல்லாம் ஒரே முழக்கமாய்ப் போற்றக் கூடியனவாய் இருக்கின்றன.

வேதங்களிலும் மற்ற நூல்களிலும் நம் ஒரு மொழி, ஓயாது ஒலித்துக்கொண்டிருக்கும் கடலைப் போல் கருக் கொண்டிருக்கிறது. கடலில் கப்பலாலும் மற்ற கருவிகளாலும் அடித்துக் கலக்கக் கலக்க, அலைகள் அதிகமாகுமே யொழிய, அமர்ந்து விடாது. கைகளும் கருவிகளும் கருத்தும் ஓய்ந்துவிடுவதைப் போன்று, நமது ஒருமொழியைப்பற்றி எழுதிய கருத்து இருந்த ஸ்தூலங்களும்,

ஸ்தூலத்திற்கு ஆதாரவாய் இருந்த பேனுக்களும், ஏடுகளும், அநேகம் எழுதியும் ஓய்ந்துவிட்டன. இன்னும் எழுதிக் கொண்டேயும் வருகின்றன. இனியும் எழுதவும் போகின்றன. எதைப்பற்றி? நமது திருமொழியாம் ஒரு மொழியைப் பற்றி.

மேலும், வேதங்கள், கீதங்கள், மற்ற நூல்கள் எல்லாம், நீர் நிரம்பிய குளங்களை-கடல்களை அடித்துக் கலக்கினதைப் போலப் பலவாறு எழுதியிருப்பதால் நமது பிறவியை முடிக்கவிடாமல் இருந்த அணைக்கரைகளை நம் ஒரு மொழி யின் அலைகளினால் மோதி இடித்து, குறையாயிருந்த பள்ளங் களில் அருள்நீர் நிரப்பி பெரும் பதவியைத்தேடி இச்சபை யில் வந்து சேர்ந்தீர்கள். சேர்ந்ததன் பயனாய் ஒருமொழியை உணர்ந்தீர்கள். கருவின் இருப்பிடம் அறிந்தீர்கள். கண், முக்கண்ணுங் கடந்த கருத்தால் ஞானத்தையும் அடைந் தீர்கள். எதனால்? ஒரு மொழியின் முழக்கத்தால். ஆகை யால் நமது ஒருமொழிக்குமேல் மறுமொழி இல்லவே இல்லை.

உலகத்தில் மனிதர்கள் இறக்கும்போது நல்லடியராயும், மனைவி மக்கள் சுற்றத்தார், பொருள்கள் முதலியன இருந் தும் அவைகளில் பற்றுதலில்லாதவர்களாயு மிருந்தால், அவர்களுடைய சூக்குமம் சிறிது நாட்கள்வரை இச்சரீர லோகத்திலேயே இருந்து, பின்னர் சூக்கும லோகத்திற்குச் சென்று, (ஆதியும் உலக இணைப்பும் 15ம் பக்கம் பார்க்க) தன் சூக்கும சரீரத்தைத் தண்ணீரில் ஊறின ஒரு சப்ஜா விதை அளவில் அடக்கி — அடங்கி ஒரே முழக்கமான நமது ஒருமொழியின் இராகத்தில் லயித்து, சுகமாய் இருக் கிறது. இந்த ஸ்தானத்திற்குத்தான் சொர்க்க லோகம்

அல்லது மோக்ஷ லோகம் என்று பெயர். அப்படி சூக்குமத் திரேகத்தில் இருக்கும் ஆத்மா அந்த ஒருமொழியின் ராகச் சுவையில் இரண்டாயிர வருஷ காலம் இருந்தாலும் அதை விட்டு வெளிவர விரும்பாது. ஆயினும் அது தன் சொந்த மான, ஆதியிடம் போகாமல் இருப்பதால், இப்போது நீங்கள் அடைந்திருக்கும் ஐக்கியப்பதவிக்கும், அதற்கிடை யில் அனுபவிக்க வேண்டிய பிறவிக்கும் நமது ஒருமொழி யின் அனுபவங்களை அநேக வருட காலம் அனுபவித் திருப்பதால் தன் காரியங்களை முடிப்பதற்கும், சௌகரிய மான ஒரு நல்ல இடத்தைத் தேடி, சரீர லோகத்தில் சமயம் வாய்த்ததும் பிறவி எடுக்கிறது. பிறவி எடுத்த பின் நல்லடியர்களாகி இவ்வுலகில் போற்றக் கூடிய நல்ல அறி வுடையவர்களாய், முடிவு தெரிய-ஞானம் அடைய-அவா வுடையவர்களாய் இருப்பார்கள். இப்போது நீங்கள் அடைந்திருக்கும் பெரும் பாக்கியத்திற்கும், நம் ஒருமொழி யின் முழக்கத்தை வெகு காலம் நீங்கள் அனுபவித்ததன் பயனே யாகையால் இவ்வொருமொழி பெரும் நன்மைக் குரியதாம்.

பெய்கின்ற மழைநீரில் எவ்வித அழுக்கும் இல்லை. நிலத்தில் விழுந்த பின்னரே அது நிலத்தின் தன்மைக் கேற்ப அழுக்காகி சுவையும் நிறமும் மாற்றமடைகின்றது. அதேபோல் எல்லாருடைய ஆத்மாவும் சுத்தமானதே. ஆயினும் அவரவர்களுடைய குணத்தாலும், அறிவாலும், அநேகவித குறைகளுக்கும் பிறவிகட்கும் ஆளாகின்றனர். நீர்நீரும் சூரிய வெப்பத்தால் சுத்தமாகிப் பின் மழையாகப் பொழிவதுபோல், தம் குற்றத்தைத் தாமே உணர்ந்து, தவக்கனலைக்கொண்டு பிறவியை முடிக்க முற்படுங்கள்.

தச நாதம்.

சரீரத்திலுள்ள இருளின் தொனி ஒன்றும், நாம் சாப்பிடும் உணவுப் பொருட்கள் இரத்தமாய் மாறிப் பிந்தாகி மூலத்தில் சேர்ந்துகொண்டிருக்கும் மூலத்துவாரத்தின் தொனி ஒன்றும், இருதய இரத்தத்தின் சுழலின் தொனி ஒன்றும், சுவாசத் தொனி ஒன்றும், வெளித் தொனி ஒன்றும், ஆக நம்மில் இருக்கும் தொனிகள் ஐந்து; இவை நொடிக்குமுன் மாறி ஒவ்வொரு தொனியும் இரண்டாகப் பிரிந்து, பத்து விதமான சப்தங்களாகக் கேட்கும். இப்படிக் கேட்பதைத்தான் எல்லா ஞான நூல்களும் தச நாதம் என்று சொல்லி வருகின்றன. இச்சப்தங்களைக் கேட்க அவாவுடையவர்கள் கேட்டுவிட்டால், இவைதான் ஞான முடிவு என்றும் சொல்லிக்கொள்வர். நம் சபையில் உள்ள மெய்யுணர்வாளர்களில் சிலர் இச்சப்தங்களை எப்போதும் கேட்டுக்கொண்டிருப்பதும் உண்டு. சுமார் இரவு மூன்று மணிக்கு எழுந்து, மெதுவாய்ப் பின்கண்ணைக் கவனித்தால் வெகு சுலபமாய் இச்சப்தங்களைக் கேட்கலாம். நிலாக் காலங்களிலும், நிச்சப்தமான இடங்களிலும், தனித்த அறையிலும் இருந்து கவனிக்கச் சாதகமாகும். இப்படிக் கவனிக்குங்கால் அவரவர்களுடைய மனதை மகிழ்விக்கும் தாளங்கள் — சப்தங்கள் கேட்கும். அப்படிக் கேட்பதால் மனம் சந்தோஷப்படும். சந்தோஷத்தில் ஈடுபட வைக்கும். சமயங்களெல்லாம் சரியாக — சமமாகவே தெரியும். சத்தையே விரும்பும். அசத்தின் குணத்தில் ஈடுபடாது. உடலில் உள்ள அணுக்களெல்லாம் சுறுசுறுப்பாய் உடலைப் பாதுகாக்கும். இன்னும் அநேக நன்மைகள் உண்டாகும்.

இந்நாதங்களைப் புகழாத வேதம், மதம் பெரியோர்கள் இல்லவே இல்லை. இப்போது சொல்லிவந்த தச நாதத் தொனியை இச்சபையோர்கள் நெருப்பாறு, மயிர்ப்பாலம் தெரிந்திருப்பதால் ("ஞானக்கண்" 9ம் பக்கம் பார்க்க.) அதைக் கவனித்தவுடனே கேட்கக்கூடும். மற்றும் அதன் முடிபும், தொனியின் பொருளும், நீங்கள் அடைந்திருக்கும் திருமொழியாம் ஒரு மொழியே யாகும்.

வேகமாய் வேலை செய்யும் இயந்திரங்களிலும், எல்லா ஜீவனுக்குள்ளும் நிறைந்திருக்கும் முழக்கங்களிலும், அடிக்கும் பூஜை மணியின் அலைகளிலும் ஒலிக்கும் ஓங்கார மொழியே நம் திருமொழியாம் ஒருமொழி.

உலகில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு க்ஷணந்தோறும் ஒவ்வொரு மதஸ்தராக இருந்து வருகிறார்கள். ஒரு மதஸ்தராவது தம் மதத்தில் ஒரு நாழிகை நேரங்கூட நிலைத்திருப்பதில்லை. ஆகவே, எம் மதத்தையும் எச்சமயத் தையும் இகழாமல் ஏற்றுக்கொள்பவர்கள் அறிவுடையோர் களாவர். எல்லா மதங்களும் தேடிவருகிற ஸ்தானம் எதுவோ அதை நீங்கள் அடைந்திருப்பதால் எல்லா மதஸ்தர் களோடும் அன்பாய் இருத்தல் வேண்டும்.

உயர்வான ராகச் சுவைகளாலும், உயரிய வாசனைத் திரவியங்களாலும், உற்சாக வெளிச்சத்தோற்றங்களாலும், ஊக்கமுள்ள திடச்சொற்களாலும், உருக்கமான தன் மனோமய தைரியத்தினாலும், அநேக வியாதிகளைப் போக்குவதுடன் மிகவும் மேலான அறிவினுடைய அபிவிருத்திகளும் உண்டாகும்.

சத்திய மெய்உணர்வு ("உணர்வும் தவக்கனலும்" என்ற புஸ்தகத்தைப் பார்க்க.) அதிகம் ஆக ஆக தன் சரீர அணுக்களும் அதில் அனுபவிக்கவேண்டிய சுதந்தரப் பிறவி அணுக்களும் சத்தான மெய்யுணர்வின் சக்தியால் சரீரத்தை விட்டுவிடாமல் அனுபவிக்க வேண்டியதை எல்லாம் ஆனந்தமாய் அனுபவித்ததும், அணுவினுள் உள்ள நமது ஒரு மொழியில் அருளோடு நிறைந்து ஆனந்த நாத முழக்கத்தால் அதனுள் உள்ள சோதியின் பிரகாசம் 'பளீர்பளீர்' என்ன அணுக்கள் அலையோடு அலையாக ஆகி ஐக்கியம் ஆகுவோம்; ஆவீர்கள் என்ற சந்தோஷம் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

ஓம் ஓம் என்பார், ஓமென்ற சொல்லறியார்;
ஓம் என்ற சொல்லறிந்தால், ஓமே யவராவார்;
ஓம் என்ற சொல்லறிந்தால், ஓமில்லா இடமில்லை;
ஓம் என்ற சொல்லறிந்தபின், ஒன்று மிச்ச மில்லையில்லையே.

சந்தோஷம்.

உலக நல்லடியார்களே ! நீங்கள் பெரும் பாக்கியசாலிகள் !!

ஆரணந் தொடர்ந்துங்காணு அரும்பொருள் காணவேண்டி
காரணகுருவைத் தேடும் கருத்துள அறிஞரேஎம்
பூரணம் பொருந்திஓங்கும் புகழ்பரஞ்சோதி ஞானம்
நாரணனயனேடீசன் நாட்டையும் காட்டும் வாரீர்.

தேவருந் தேடிக்காணு சிதம்பர நடனந்தன்னை
யாவரும் எளிதில்காண அரும்பொருள் விளக்கிக்காட்டும்
மாபரஞ் சோதிநாதன் மதுரையில் அறிஞர்க்கெல்லாம்
சீர்பெற அமைத்தாரோங்கும் திகழுயர் ஞானமன்றம்.

— மெய்யுணர்வாளர், வே. முத்து சேர்வை.

சரிகை கிரிகை தபமெதற்கு சார்ந்துமேநாம் ஆவதற்கு,
தேகம் விழுவதற்கு முன்னே தெரியவேண்டும் — ஜீவநிலை
ஆனதேகம் அணுவாலே அழியாமலே பாதுகாக்க
ஓடிவாரும் உலகத்தீரே உத்தமநிலை அடைவதற்கே
தேகம் பலபல எடுத்துமய்யோ தேகத்தினுட் பொருள் அறியாமலே
தேடித்தேடி பிறக்கின்றீரே தேகம் எடுப்பதெதற்காக
ஆகும் பொருளில் அவனிருந்து அதனை புசித்து அறிவதற்கே
ஓடிவாரும் உலகத்தீரே உத்தமநிலை அடைவதற்கே
அவனுய் இருந்து நாம் பிறந்தோம் அவனில் அவனை அறிவதற்கே
அவனில் அவனை அறிவதற்கு ஆசான் பரஞ்ஜோதிடம் வந்து
அவனில் அவனை அவனறிந்து ஆவாய்தாம் தாமாவீரே
ஓடிவாரும் உலகத்தீரே உத்தமநிலை அடைவதற்கே.

— மெய்யுணர்வாளர், K. செல்லையா பிள்ளை.

பரஞ்ஜோதி மஹான் அருளிய
"எந்நூலுக்கும் இந்நூலே மூலம்" என்ற
உயர்ஞான நூலில்

1. ஒருமொழி.
2. பேரறிவு.
3. பரஞ்ஜோதி.
4. ஞானக்கண்.
5. ஆதியும் உலக இணைப்பும்.
6. ஆறுதாரமும் அமிர்தமும்.

அச்சில் :—

1. பூதலோகம்.
2. உணர்வும் தவக்கனலும்.
3. நடந்ததெல்லாம் நன்மைக்கே.
4. சந்தோஷம்.

ஷை புத்தகங்கள் கிடைக்குமிடம்:—

பரிபூரண பரஞ்ஜோதியின் உயர்ஞான சபை,
நிர். 1, மேல வடம்போக்கித் தெரு, மதுரை.

பரிபூரண பரஞ்ஜோதியின் உயர்ஞான சபை,
33, கும்மாளம்மன்கோயில் தெரு,
தண்டையார்பேட்டை, சென்னை.

ஷை சபை, நிர். 1, பில்கிங்டன் ரோடு, பெரம்பூர்.

ஷை சபை, நிர். 30, நம்மாழ்வார் செட்டித்தெரு, சூளை.

பரிபூரண பரஞ்ஜோதியின் உயர்ஞான சபை,
ஜஸானி பவான் மட்டுங்கா, பாம்பே 19.

பரிபூரண பரஞ்ஜோதியின் உயர்ஞான சபை,
கீழரத வீதி, சொக்கலிங்கபுரம், அருப்புக்கோட்டை.

எல்லா புஸ்தகக் கடைகளிலும் கிடைக்கும்.